(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No.CC. 85 of 2019 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |

| | | |
|---|---|---|
| | Prosecution | **P.W. 6** |
| Deposition of witness for | Defence | |
| | Court | |

| | | |
|---|---|---|
| Name | : | டாக்டர். வேணிசுந்தரம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2022.

15.07.2022 at 11.30 A.M

**முதல் விசாரணை :**

நான் தற்போது நாகர்கோவிலில் ஆரம்ப சுகாரதார நிலையத்தில் அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துரவராக பணியில் இருந்த சமயம் 2.6.2019 தேதி இரவு 9.40 மணியளவில் கோபிநாத் த/பெ.குமரையா என்பவர் சிகிச்சைக்காக வந்தார். கோபிநாத்யை விசாரித்தபோது அவருக்குத் தெரிந்தநபர் அவரைத் மரக்கட்டையால் தாக்கியதாக என்னிடம் கூறினார்.

அவரை பரிசோதித்து பார்த்தபோது தலையின் நடுப்பகுதியில் 7x2x2 செ.மீ. அளவிற்கு சிதைந்த காயம் காணப்பட்டது. தலையின் இடதுபக்கத்தில் சிறிய அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது. முகத்தின் இடது கண்ணத்தில் 3x2x2 செ.மீ.அளவிற்கு சிதைந்த காயம் காணப்பட்டது. இடதுபக்க மூக்கின் தூவரத்தில் ரத்தம் வழிந்த நிலையில் காணப்பட்டது. தலைப்பகுதியில் காயம் இருந்ததால் கோபிநாத்யை இராமநாதபுரம் தலைமை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன்.

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் கோபிநாத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்று வழங்கியதன் அடிப்படையிலும் கோபிநாத்திற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று விபத்து பதிவேட்டில் பதிவு செய்து காயச்சான்று கொடுத்தேன், **காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.3.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் மேல்சிகிச்சை அளித்த அரசு மருத்துவரின் கருத்துரையை நான் என்று பார்வையிட்டேன் என்று சொன்னால் எனக்கு தேதி தெரியவில்லை. என்னிடம் போலிசார் விசாரித்து தனியாக எதுவும் வாக்குமூலம் வாங்கவில்லை. நான் காயத்தின் தன்மை குறித்து மற்றும் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து வைத்திருந்தேன். மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய மருத்துவர் கருத்துரையில் எத்தனை காயங்கள் காணப்பட்டதாக குறிப்பிட்டு கூறி இருந்தாரா என்றால் இல்லை.

நுண்கதிர் மற்றம் ஸ்கேன் எடுத்து பார்த்தால் தான் ஒருவருக்கு

ஏற்பட்ட காயத்தின் தன்மையை அறிய முடியும் என்று சொன்னால் காயத்தின் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தான் நுண்கதிர் மற்றும் ஸ்கேன் எடுத்துப்பார்ப்போம். மேல்சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய நுண்கதிர் படத்தையோ ஸ்கேன் புகைபடத்தையோ காணவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபர் காவல்துறையில் வழங்கிய மருத்துவ குறிப்பாணையைக்கொண்டு வந்து சிகிச்சைக்கு வந்தாரா என்றால் நேரடியாகத் தான் வந்தார்கள். குறிப்பாணை எதுவும் கொண்டு வரவில்லை.

காவல்துறைக்கு எப்போது தகவல் அனுப்பினீர்கள் என்றால் இரவு 10 மணிக்கு தகவல் கூறியிருப்போம். விபத்து பதிவேட்டில் காவல்துறைக்கு தகவல் தெரிவித்த நேரத்தை குறிப்பிட்டு கூறவேண்டும் என்றால் அது அவசியம் கிடையாது. விபத்து பதிவேட்டை நான் 2.6.2019 ம் தேதி தயார் செய்தேன்.

விபத்து பதிவேட்டில் கண்டுள்ள காயங்களில் எந்த காயம் கொடுங்காயம் என்று காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம், சிகிச்சைக்கு வந்த காயம்பட்ட நபர் அடையாளம் தெரிந்த ஒரு நபர் தாக்கியதாகத்தான் கூறினார் என்றால் சரிதான்.

தலை மற்றும் கண்ணத்தில் கட்டை மற்றும் கம்பால் அடித்தால் சிதைந்த காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சாதாரணமாக தாக்கினால் வீக்ககாயம் ஏற்படும், தாக்குகின்ற வேகத்தை பொறுத்து சிதைந்த காயம் ஏற்படும். நான் குறிப்பிட்டுள்ள காயங்கள் இருசக்கரவாகத்தில் போகும்போது கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். மேல்சிகிச்சை அளித்த மருத்துவரின் கருத்துரையை நான் புலன்விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை.